முருகப்பெருமான் துணை

**மகான் உருத்திர பசுபதி நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

23.11.2021, செவ்வாய்கிழமை

1. தவராஜனே அரங்கா வாழ்க
தருமசக்தியே தேசிகா வாழ்க
அவனியில் உன் பெருமை கூறி
அறிவிப்பேன் துல்லிய ஆசி

2. ஆசிதனை பிலவ தேள் திங்கள்
அறிவிக்க சப்தம திகதி குசன்வாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 07ம் நாள், 23.11.2021 செவ்வாய்கிழமை)
ஆசிதனை உருத்திர பசுபதி நாயனாரும்
**(மகான் கருவூர் முனிவருக்காக கரூரில் பசுபதி ஈஸ்வரர் கோயில் அமைத்து குடி கொண்டுள்ளார்)**
அருளுவேன் உலக நலம்பெற

3. நலம்தரும் ஞானவான்கள் படை
நாடெங்கிலும் அரங்கன் சக்தியாக
வலம்வர கலியுக மக்களே
**(முருகப்பெருமானால் வாசி நடத்தி கொடுக்கப்பட்ட நவகோடி சித்தர்களும் ஓங்காரக்குடிலாசானின் அறப்பணிகளாக நாடெங்கிலும் மையம் கொண்டுள்ளார்கள்)**
வணங்கி அரங்கன் வழிக்குவர

4. வருகவே மக்களுக்கு ஞானிகளிடம்
வரமும் நல் அருளாசியும்
தரும பலமும் வந்தடையக் கூடும்
தவசியே என பணிந்து தீட்சை

5. தீட்சை பெற்று வினை விலக
தொடர்பூசை செய்யும் மக்களுக்கு
மாட்சிமைபட சகல ஞானமும்
மரணம் வெல்லும் சக்தியும் கூடும்

6. கூடவே பிரணவக் குடிலில்
குருவருள் சர்வ பலமாய் இருக்க
சடாட்சர செபதபம் செய்து **( "ஓம் சரவணஜோதியே நமோ நம" மகத்துவம் பொருந்திய இந்த மந்திரத்தை சொல்பவர்கள் முருகப்பெருமானின் ஆசியையும், முருகப்பெருமான் ஆசி பெற்ற நவகோடி சித்தர்களின் ஆசியையும் பெறலாம்)**
சரணடைவு கொண்டு வருக

7. வருகவே புவியின் கட்டங்களும் **(சகல துன்பங்களும்)**
வளரா அகன்று மாற்றங்கள்
தரும பலம் கொண்டதாகவும்
தனித்துவம் மிக்கதாகவும் காணும்

8. காணவே ஞானபூமி ஆக்க
கந்தனும் அரங்கன் வழி
ஞானத்தை சன்மார்க்கமாக
நாட்டிடுவேன் உலகமெங்கும் பரப்பி

9. பரப்பியே மக்கள் பின்பற்றி
பரிபக்குவம் ஞானம் பெற
அறத்தின் வழி அருளிவர
ஆறுமுகா முருகா எனும் செபம்

10. செபதபம் எங்கும் முழங்கவே
செகமே பிரணவ சக்திவழி
அபயமென மக்களெல்லாம் இணைய
ஆபத்தில்லா பாதுகாப்புமிக்க

11. பாதுகாப்புமிக்க ஞானவாழ்வாக
பாருலகில் பாமரரும் கண்டுமே
பூதலம் ஞானவான் மிஞ்சிய
புதுமை மிக்க ஞானஆட்சிதனை அடையும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–